Registered M. 878

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JAN 1926
MADRAS

ஓம்

# ஞானோதயம்.

பிரம்மஞ்ஞான மாதாந்தரப் பத்திரிகை.

பத்திராதிபர்கள்

அ. ரங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல்., மதுரை.

வி. விசுவநாதய்யர் பி. ஏ., பி. எல்., மதுரை.

தொகுதி 15] 1925-ளு ஏப்ரல் 21உ [பகுதி 10

பொருளடக்கம். பக்கம்

மதுரை பிரம்மஞ்ஞான சபையாரால் வெளியிடப்பட்டது.

1. தற்கால நிலைமை ... 289
2. தேவீபாகவதசாரம் ... 294
3. புனர்ஜன்மமீமாம்சை ... 297
4. ஸுசீலை அல்லது உண்மையின் வெற்றி ... 305
5. தைவீஸம்பத்து ... 313

வருஷச்சந்தா ரூ. 2-0-0. ] [தனிப்பிரதி 4 அணா

விளம்பர விகிதம்.

5 ... யாமலிருந்தால் பக்கத்திற்கு ரூ. 10
... ல் பக்கத்திற்கு ரூ. 12
... அவ்விதமே பங்கிடுக.

# “தியசாபிகல் சொசைட்டி” என்னும் பிரம்மஞ்ஞான சபை.

---

இது 1875-ஆு நவம்பர்மீ 17உ அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் ஏற்பட்டுச் சென்னை அடையாற்றில் நிலை பெற்றிருக்கிறது. சமரச புத்தியோடு தத்துவ ஆராய்ச்சிக்கு ஒன்று சேருவோர்களின் சங்கம் இது. ஆதலால் இச்சங்கத்தார் நாஸ்திகத்தை கண்டித்து ஆஸ்திகபுத்தியை வளர்த்து மனிதவர்க்கத்திற்கு ஞான வழியில் உபகரிப்பவர்கள் ஆவர். இதன் முக்கிய கொள்கைகள் மூன்று:—

(1) ஜாதி, மதம், வர்ணம், வகுப்பு, ஆண், பெண் இப்பேதங்களின்றி ஸர்வஜன சோதரபாவம் நிலைபெறச் சாதகமாயிருத்தல்.

(2) வெவ்வேறான மதம், தத்துவ சாஸ்திரம் பௌதிக சாஸ்திரங்களை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்வதை ஆதரித்தல்.

(3) மனிதனிடத்தடங்கியுள்ள சக்திகளையும் நமக்கு விவரந் தெரியவாராத பிரபஞ்சநியதிகளையும் பரிசீலனஞ் செய்வது.

பிரம்மஞ்ஞான சபையில் சேருகிறவர்கள் எம்மதத்தராகவும் இருக்கலாம். அல்லது ஒருமதத்தையும் அங்கீகரிக்காதவராகவும் இருக்கலாம். ஆனால் மேற்படி நோக்கங்களை ஒப்புக்கொண்டும், மத துவேஷங்களை ஒழித்து நல்லெண்ண முள்ளவர்களாயிருந்து கொண்டு தங்கள் மத அபிப்பிராயங்கள் எப்படியிருப்பினும் மதவுண்மைகளைப் படித்து மற்றவர்களோடு தங்கள் படிப்பைக் கலந்து கொள்ள விரும்பும் படிப்பாளிகள் இச்சங்கத்தில் ஒருங்கு சேருகிறார்கள். அவர்கள் ஒற்றுமைக்கு ஒரே பொது நம்பிக்கை காரணமல்ல; தத்துவத்தைக் கண்டறியும் ஒரே லக்ஷியத்தோடு அவர்கள் ஒருங்கே முயற்சிப்பது தான் காரணம்.

---

## இந்தப் பத்திரிகை வேண்டுபவர்கள்

K. நாராயணசாமி அய்யர்
பென்ஷன் சப்மாஜிஸ்திரேட்
ஞானோதயம் ஆபீஸ் மானேஜர்.
பெருமாள் தெப்பக்குளம் தெரு மதுரை
என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**Registered M. 878**

# ஞானோதயம்.

பிரம்மஞ்ஞான மாதாந்தரப் பத்திரிகை.

பத்திராதிபர்கள்

அ. ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ., பி. எல்., மதுரை.

வி. விசுவநாதய்யர் பி. ஏ. பி. எல், மதுரை.

தொகுதி 15 ] 1925-ஷ ஏப்ரல் 21௳ [ பகுதி 10

## தற்கால நிலைமை.

---

அடையாற்றில் தென்இந்திய பிரஹ்மஞான கன்பிரென்ஸானது நாளது எப்பிரல்மீ 10௳ முதல் 13௳ வரை நடைபெற்றது. நமது தலைவர்களாகிய டாக்டர் பெஸண்டு, மிஸ்டர் ஸி. ஜினராஜதாஸர் முதலானோர் அக்காலத்தில் ஆஜர் இல்லாமலிருந்தாலும் அக்கன்பிரென்ஸானது வழக்கம்போல் கூடும்அங்கத்தினர்களின் ஸங்கியை குறையாமல் நிகழ்வுற்று பலனுடன் நிறைவேறிய காரணத்தால், பிரஹ்மஞான சபையின் அங்கத்தினர்கள் தம்தம் உத்திரவாதத்தையும் தம்தம் ஸ்தானத்தின் கடமையையும் நன்குணர்ந்து அவைகளை நிர்வகித்து நடத்துவதற்குரிய ஐக்கிய பாவமும் திடமனதும் கூடியுள்ளார் என்றும், தலைவர்கள் பிரிந்திருந்தாலும் சபை நன்கு நடைபெறத் தக்கதென்றும் வெளியாயிற்று.

* * * * *

210797



அந்தக் கன்பிரென்ஸில் நடைபெற்ற விஷயங்களில் வருங் கால உயர்தர லக்ஷியங்களைப்பற்றி சில உபந்நியாசங்கள் செய்யப் பட்டன. அதாவது வாலிபர்களின் பயிற்சியைப் பற்றியும் தீண்டா ஜாதியார்களின் முன்னேற்றத்தைப் பற்றியும் ஸ்திரீ [illegible] அபிவிருத்தியைப் பற்றியும் அவ்வுபந்நியாஸங்கள் நடைபெற்றன. நமது இந்திய தேசத்தில் இப்பொழுது நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் நாகரீக மாறுதல்களையும் ஆசார பேதங்களையும் மத வேற்றுமைகளையும் ஜாதி முரண்களையும் நூதனமாய்த் தோன்றி நிற்கும் உயர்தர லக்ஷியங்களையும் சம்பந்தித்து நிற்கின்றன. இவைகள் சம்பந்தமாய் நமது ஜன ஸமூகத்தினர் கொண்டிருக்கும் அனுஷ்டானங்கள் பூதகாலமாகிய கடந்த கல்பத்தைச் சார்ந்தனவைகள். அவைகள் பவிஷ்ய காலமாகிய வரும் கல்பத்தைச் சார்ந்தனவைகள் அல்ல. ஆகையால் அவைகளை மாற்ற வேண்டியது அவசியமா யிருக்கின்றது. அப்படி மாற்றத் தவறினால் அதின் பயனாக நமது நாகரீகமானது ஆயுசு விர்த்தியற்றுப் போய்விடும்.

*　　*　　*　　*　　*

ஆரியர்களாகிய ஐந்தாவது மானிட ஜாதியாரை முதல் முதலில் பகவான் வைவஸ்வத மனுவானவர் சுமார் 80000 வருஷங்களுக்கு முன்னர் மத்திய ஆசியா கண்ட பிரதேசங்களில் சுவேதத் தீவிற்கருகில் ஸ்தாபித்தார். அந்த ஜாதியார் அப்பிரதேசங்களில் சுமார் 60000 வருஷங்களாக சிறப்புடன் அபிவிர்த்தி யடைந்து விளங்கினார்கள். அவ்வாரியர்களின் முதல் உப ஜாதியோராகிய இந்துக்கள் சுமார் 20000 வருஷங்களுக்கு முன் முதல் பல கூட்டங்களாக அப்பிரதேசங்களை விட்டு வெளிக்கிளம்பி நமது இந்தியா தேசமாகிய ஆரிய வர்த்தத்தில் குடியேறினார்கள். சுமார் 11000 வருஷங்களுக்கு முன் அவர்கள் எல்லோரும் இத்தேசத்திற்கு வந்து விட்டனர். ஆகையால் இத்தேசத்தின் நாகரீகமானது சுமார் 80000 வருஷங்களாக துயர்ந்து நீடித்து வந்திருக்கும் நாகரீகமா யிருக்கிறது.

*　　*　　*　　*　　*



அந்த நீண்ட காலத்திற்குள் உலகின்கண் பல நாகரீகங்கள் அழிவடைந்தும், நூதன நாகரீகங்கள் உதயமாயும் இருக்கின்றன. எகிப்து, பாபிலோனியா, அஸீரியா, பாரஸீகம், கிரேக், ரோமபுரி முதலிய பிரதேசங்களில் தோன்றிய நாகரீகங்கள் இந்துக்களின் நாகரீகத்திற்குப் பின் தோன்றி முன்னேற்ற மடைந்தும் மலின முற்றும் மறைந்து விட்டன. [illegible]னமாக ஐரோப்பிய நாகரீகமும் இஸ்லாம் சம்பந்தமான நாகரீகமும் சென்ற இரண்டாயிர வருஷ காலத்திற்குள் உற்பத்தியாகி மேம்பாட்டை அடைந்திருக்கின்றன. இந்திய நாகரீகத்துடன் புராதன காலத்தைச் சார்ந்த யூத நாகரீகமும் சீன நாகரீகமும் தற்காலம் வரை வாழ்ந்து வருகின்றன. ஆனால் யூதர்களோ பெரும்பாலும் ஐரோப்பியர்கள் வசிக்கும் பல தேசங்களில் குடியேறி சிதறுண்டு பஹிர்முகமான ஆசாரங்களில் ஐரோப்பியர்களை ஒத்திருக்கின்றனர்.

*　　*　　*　　*　　*

நூதன கல்பத்தின் சின்னங்கள் இப்போது தோன்றி வருகின்றன. ஐரோப்பிய நாகரீகத்தின் சில வெளிதத்துவங்களை இந்த 2000 வருஷங்களுக்குள் பழமையாய் விட்டன. அவைகள் நூதன கல்பத்தின் உயர்தர லக்ஷியங்களுக்கு பல அம்சங்களில் முரணாக நிற்கின்றன. சென்ற இரண்டாயிர வருஷங்களுக்குள் தோன்றின ஐரோப்பிய நாகரீகமே அப்படி முரண்பட்டு நின்றால் சென்ற 80000 வருஷங்களாய்த் தோன்றி நிற்கும் இந்திய நாகரீகத்திற்கும் நூதன கல்பத்திற்கும் முரண் எற்படுவது ஆச்சரியமன்று. ஆனால் இந்திய நாகரீகத்திற்குத் தக்கவாறு தன்னை ஒருமைப் படுத்திக்கொள்ளும் ஓர் இயல்பு அமைந்திருப்பதால் அது இவ்வளவு காலம் நீடித்து நின்று இருக்கின்றது. அது வருங் காலத்தின் உயர்தர லக்ஷியங்களுடன் ஒற்றுமை பெற்று வாழக் கூடிய சக்தியும் அமைந்துள்ளதென நாம் நம்புவதற்கு இட மிருக்கின்றது.

இவ்விதமான விசேஷ இயல்புடன் கூடி நிற்றலுக்குக் காரணம் இந்து மதமாகிய ஸநாதன தர்மத்தின் ஆதாரமாய் நிற்கும் தத்துவங்கள் சாசுவதமான தத்துவங்களாய் இருத்தலேயாம், ஈசுவரனாகிய ஒரே வஸ்துவினின்று பிரபஞ்சமாகிய நானாவித வஸ்துக்கள் தோன்றி நிற்கின்றன வென்றும், அவைகளெல்லாம் பிரளய காலத்தில் ஈசுவரனிடம் லயத்தை அடைகின்றன வென்றும், எல்லா வர்க்கங்களிலும் இயங்கும் ஜீவர்களெல்லாம் ஈசுவரனது அம்சங்களென்றும், அவர்கள் ஜன்மங்கள் தோறும் இவ்வுலகில் தோன்றி விகாஸகதியில் மேற் செல்லுகிறார்களென்றும், இப்பிரபஞ்சத்தில் நிகழும் எல்லா வாழ்வும் சம்பவங்களும் ஓர் தர்ம நியமத்தைத் தழுவி நிற்கின்றனவென்றும், கர்ம நியமம் என்பது அதின் ஓர் உதாரணமாய் நின்று ஜீவர்களின் விகாஸ கதிக்கு இன்றியமையாத சாதனமா யிருக்கின்றதென்றும், விகாஸ கதியின் முடிவாய் ஈசுவரனை அடைவதற்கு ஏற்பட்டுள்ள வழிகள் பலவாய் உள்ளனவென்றும், அவ்வழிகளையே உலகத்திலுள்ள பற்பல சமயங்கள் அவலம்பித்து நிற்கின்றனவென்றும் இன்னும் மற்ற விதமாய் அத்தத்துவங்கள் முறையிடுகின்றன.

*　　*　　*　　*　　*

நாம் அத்தத்துவங்களைக் கொண்டு காலத்திற்குத் தக்கவாறு மாறி மாறி நிற்கும் தேச, ஜாதி ஏற்பாடுகளை உயிர்ப்பிக்கச் செய்வதால் தான், நமது தேசத்தின் நாகரீகமானது நீடித்த வாழ்வைப் பெறுகின்றது. இவ்விதமாய் இந்தியா தேசத்தில் முன் காலங்களில் பழையன போயினும் புதியன தோன்றினும் ஸநாதனமாயுள்ள மூல தத்துவங்கள் கைவிடப்படவில்லை. ஆகையால் இந்திய நாகரீகம் அழிவு அடையாது நெடுங்காலம் நீடித்து நிற்றலுக்கு காரண முண்டாயிற்று.

*　　*　　*　　*　　*

ஈசுவர ஸங்கற்பத்தில் ஐந்தாவது மூல ஜாதியாராகிய ஆரியர்களின் முன்னேற்றமானது இன்னும் உன்னத நிலையை அடையவில்லை. நாலாவது மூல ஜாதியார் அவர்களுடைய மூன்றாவது



உப ஜாதியாகிய 'டால்டெக்' Toltac) ஜாதியார் காலத்திற்றான் உயர்ந்த நிலையை அடைந்தார்கள். அவர்களுக்குப் பின் நான்காவது மூல ஜாதியாரின் 4 முதல் 7 வரையுள்ள உப ஜாதியார்கள் அவ்வுயர்நிலை பெறவில்லை. ஐந்தாவது மூல ஜாதியாரின் உயர்தர நிலை வருங்காலத்தில் தோன்றப் போவதால அதற்கு நீடூழி காலமாய் வாழ்ந்து வந்திருக்கும் இந்தியர்களின் நாகரீகமும் நவீனமாய் தோன்றியிருக்கும் ஐரோப்பியர்களின் நாகரீகமும் ஒன்றுபட்டு அவ்விரண்டையும் உயிர்ப்பித்து நிற்கும் மூல தத்துவங்கள் ஸமரஸம் பெற்று விளங்குவதே காரணமாகும்

*　　*　　*　　*　　*

அந்த ஐக்கிய நிலையை லௌகீக வழியில் நிலை நிறுத்துவதற்கு ஓர் ஸாம்ராஜ்ஜியம் வேண்டும். இந்திய ஆங்கிலர்களின் ஸாம்ராஜ்ஜியம் இவ்வுலகில் தோன்றிடில் அதுவே அதற்குரிய ஸாம்ராஜ்ஜியமாகும். அந்த ஸாம்ராஜ்ஜியம் தோன்றுவதற்கு நம்முடைய நாகரீகமும் அதில் அமைந்துள்ள ஏற்பாடுகளும் ஆசாரங்களும் பழைய ஸநாதன தத்துவக்களைக் கைவிடாமல் காலத்திற்குத் தக்க நூதன அமைப்பைப் பெற வேண்டும். லௌகீக ஆட்சியில் இந்தியர்கள் ஆங்கிலர்களுக்கு சமமாய் எல்லா உரிமைகளையும் அடைந்து சுயஆட்சி பெற வேண்டும், அதற்காகத் தான் நம்முடைய அக்கிராஸனராகிய டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார் இடைவிடாது உழைனறு இந்தியர்களை ஐக்கியப்படுத்த முயன்றும் அவர்களுடைய பிரதிநிதிகளைக் கொண்டும் இந்திய சுய ஆட்சி மசோதா சட்டத்தை கான்பூர் நகரில் நாளது ஏப்ரல்மீ 11, 12, 13, 14உகளில் கூடின "நாஷனல் கன்வென்ஷன்" மூலமாய் நிர்மாணித்திருக்கின்றனர். அம்மசோதா சட்டமானது பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபையில் சமீபகாலத்தில் பிரேரணை செய்யப்படும். உலகின் அபிவிர்த்தியையும் இந்திய ஐரோப்பிய நாகரீகங்களின் உண்மையான முன்னேற்றத்தையும் ஐந்தாவது மானிட மூல ஜாதியாராகிய ஆரியர்களின் மேம்பாட்டையும் விரும்வோர்கள் எல்லோரும் அதை ஸ்தாபித்துத் ஊர்ஜிதப்படுத்த முயன்றிடல்

வேண்டும். அது இந்தியாவின் க்ஷேமத்திற்கு மட்டும் உரித்தானதல்ல. உலகின் க்ஷேமத்திற்கே உரித்தானது இம்முடிவு பெறுவதற்கே இந்துக்களாகிய ஐந்தாவது மூல ஜாதியாரின் முதலாவது உப ஜாதியோர் இவ்வுலகில் இவ்வளவு காலம் நீடித்து வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

**ஏ. ரெங்கஸ்வாமி அய்யர்.**

---

# தேவி பாகவத ஸாரம்.

## பூஜா விதி.

தேவி கூறுகிறான்!

பூஜையானது பாஹ்யம், ஆப்யந்தரம் என இருவகைத்தாம். பாஹ்யம் அல்லது வெளிப் பூஜையும் இருவகைப்படும். வைதிகம் தாந்திரிகம் என்று. வைதிக பூஜையும் இருவகைத்தாம். விராட் பூஜை ஒன்று, மூர்த்தி பூஜை மற்றொன்று. மூர்த்திகளின் பேதத்தால் மேற்கூறியபடி வித்தியாசம் கூறப்படுகிறது. வேததீக்ஷையோடு கூடியவர்கள் வைதீக பூஜையையும், தந்திர தீக்ஷை பெற்றவர்கள் தாந்திரிக பூஜையையும் செய்ய வேண்டும். அதற்கு மாறாகச் செய்யக்கூடாது.

விராட் பூஜையைப் பற்றிச் சொல்கிறேன் கேள். அனந்தமாகிற தலைகளையும் கண்களையும் பாதங்களையும் உடையதும் பெரிதானதும், சமஸ்தமான சக்திகளுடன் கூடினதும். மேலானதற்கெல்லாம் மேலானதும் எல்லாவற்றையும் பிரேரகம் செய்வதுமாகிய என் விராட்ஸ்வரூபத்தை ஸதா பூஜை செய்ய வேண்டியது, வணங்க வேண்டியது, தியானம் செய்ய வேண்டியது, நினைக்க வேண்டியது. சாந்தனாகவும், மனதை சமாதானம் செய்துகொண்டு, டம்பம் அகங்காரம் அற்றவனாக, அந்த ஸ்வரூபத்தில் ஈடுபட்டவனாக அதையே சரண மடைந்தவனாக, அதையே மனதால்



பார்த்துக்கொண்டு, தியானம் செய்துகொண்டு, வேறு ஒன்றிலும் பற்றற்றவனாக அதிலேயே பற்றுள்ளவனாக இரு. யஜ்ஞம், தானம், தபஸ் முதலியவைகளால் என்னையே திருப்தி செய். அப்படிச் செய்தால் என்னுடைய அனுக்கிரஹத்தால் ஸம்ஸார பந்தத்திலிருந்து நீ நிச்சயமாய் விடுபடுவாய். எவர்கள் என்னை பரமாய் கொண்டிருக்கிறார்களோ என்னிடத்தில் ஆஸக்தியை யுடையவர்களோ, அப்படிப்பட்ட பக்த சிரேஷ்டர்களை பவ பந்தத்திலிருந்து சீக்கிரம் விடுவிக்கிறேன் என்று நான் வாக்களிக்கிறேன்.

மூர்த்தி பூஜை:—ஒரு விக்கிரஹத்திலாவது, தரையிலாவது, ஸூர்ய மண்டலத்திலாவது, சந்திர மண்டலத்திலாவது, ஜலத்திலாவது, பாணலிங்கத்திலாவது, வஸ்திரத்திலாவது, ஹிருதய கமலத்திலாவது, பராத் பரையான தேவியை தியானம் செய்ய வேண்டியது. ஸகுணமாயும் கருணையால் நிறைந்தவளாயும், அருள் நிறைந்த முகத்துடன் கூடியவளாயும், அழகின் எல்லையாயுள்ளவளாயும், எல்லா அவயவங்களிலும் அழகு பொருந்தியவளாயும், சிருங்காரரஸம் நிறைந்தவளாயும், பக்தர்களுக்குத் துன்பம் வருவதைப்பற்றி மனம் வருந்துபவளாயும் சந்திரக் கலையைத் தலையில் தரித்தவளாய், பாசத்தையும் அங்குசத்தையும் இரு கைகளில்தரித்து மற்ற இரு கைகளிலும் வர முத்திரையையும் அபய முத்திரையையும் தரித்தவளாய், ஆனந்த ஸ்வரூபியாய் என்னை தியானம் செய்து, சக்தியானுஸாரம் ஆராதனை செய்யவேண்டும்,

இம்மாதிரியான பாஹ்ய பூஜையானது ஆந்தர பூஜைக்கு அதிகாரம் ஏற்படாத வரையில் தான் செய்யத் தகுந்தது. ஆந்தர பூஜைக்கு அதிகாரம் ஏற்பட்டால் பாஹ்ய பூஜையை விட வேண்டியது.

ஆந்தர பூஜை:—என்பது ஸம்வித்தில் லயமாவது தான். என்னுடைய மேலானதும், உபாதி அல்லது சரீரம் இல்லாததுமான ரூபமானது தான் ஸம்வித். ஆகையால் ஸம்வித் என்ற என்னுடைய ஸ்வருபத்தில் யாதொரு ஆசிரயமும் இல்லாமல் மனமானது நிறுத்தப்பட வேண்டும். ஸம்வித்ரூபத்திற்குப் புறம்பான

தெல்லாம் மித்தை. மாயாரூபமான இந்த ஜகத்தாகும். ஆகையால் ஸம்ஸாரம் நசிக்க வேண்டுமானால் சாக்ஷிரூபமா யிருக்கிற, ஆத்ம ஸ்வரூபமான ஸம்வித் ஸ்வரூபத்தை மனதறிந்த சேதஸ்ஸுடைய யோகத்தினால் பாவனை செய்ய வேண்டும்.

தே. பா. ஸ்கந்தம் 7—அத்தியாம் 39.

ஆர். ரெங்கசாமி அய்யர்.

---

## வியாசம்.

---

**புதுயுகம்:**—உதய திசை நக்ஷத்திர சங்கத்தின் தமிழ் வகுப்பின் மாதாந்தப் பத்திரிகை. தொகுதி 1 பகுதி 4-பத்திராதிபர் ராவ் சாகிபு சு. வி. கனக சபை பிள்ளை. வருடச் சந்தா 1—8—0 தபாற்கூலி யுள்பட.

ராவ் சாகிபு கனகசபை பிள்ளையவர்களால் நடத்திவரும் இவ்வரிய தமிழ் மாதாந்தரப் பத்திரிகையைப் படித்துப் பெரிதும் உவந்தோம். தாரக தூதன் பத்திரிகையை நடத்திவந்த ஸ்ரீமான் தி. பி. பாஷ்யாசாரியர் தம் குருநாதன் பக்கம் சேர்ந்த பின் நக்ஷத்திர சங்கத்தின் தமிழ் வகுப்பின் மாதாந்தரப் பத்திரிகையை நடத்த ராவ் சாகிபு அவர்கள் முன் வந்தார்கள். ஒருவருடம் ரஜா எடுத்துக்கொண்டு இத்திருத்தொண்டை நடத்த முன்வந்திருக்கும் பிள்ளையவர்களுடைய பக்தியானது யாவராலும் போற்றத் தக்கது. பத்திரிகைச்குப் புதுயுகம் என்று திருநாமம் வைத்து புதிய அளவாகச் சித்திர விளக்கங்களுடன் வெளியிட்டு வருகிறார்கள். சந்தாவும் மிகவும் சொற்பம். பத்திரிகையில் மிகவும் அருமையான விஷயங்களை சாலச் சிறந்த படிப்பாளர் எழுதி வருகின்றனர். கிருஷ்ண தாஸர் பாகவத சாரத்தை மாதந்தோறும் தொடர்ந்து எழுதி வருகிறார்கள். தமிழகத்தின் பூர்வ பூகோள நிலைகள் என்ற விடாசம் ஒரு சிறிது இச்சஞ்சிகையில் வெளிவந்துளது. இதற்கு முன் சஞ்சிகையில் வெளிவந்ததையும் இனிவருவதற்கிருக்கும் பாகங்களையும் சேர்த்து இப்பத்திரிகையில் அச்சிட்டிருக்கும் படங்களுடன் ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டுவது அவசியம். இந்தியாவின் தென்பாகமும், லங்கை தீவும், இவைகளுக்குத் தெற்கேயும் மேற்கேயும் கிழக்கேயும் ஆஸ்திரேலியாவிலிருந்து தென் ஆப்பிரிக்கா வரையில் தொடர்ந்து ஒரே பூமியாக இருந்த லெமூரியா என்ற பூமியாகும். தமிழ் நூற்களிலும் தென்னாட்டைக் கடல் கொண்டதாகவும் அதனால் பல இலக்கிய நூல்கள் எல்லாம் காணாமற் போய்விட்டதாயும் சொல்லப்படுகிறது. இதற்கெல்லாம் ஆதாரமாயுள்ள விஷயங்களை இவ்வியாஸத்திலிருந்து அறியலாம். இவ்வியாசத்தை தவிர ஸ்ரீமான் ஜெ. கிருஷ்ணமூர்த்தியின் முற்பிறப்புகளைப்பற்றித் தொடர்ச்சியாகவும் பத்திராதிபர் அவர்கள் எழுதி வருகிறார்கள். இவைகளைத் தவிர பல அரிய விஷயங்களும் இச்சஞ்சிகையில் வெளிவந்துள்ளன.



இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து யாவரும் பயன் எய்த வேண்டும் என்பது எமது அபிப்பிராயம். வேண்டுவோர் திருவல்லிக்கேணியில் முகம்மது அப்துல்லா சாயிபு தெருவில் 3 நிர். வீட்டிலிருக்கும் ராவ் சாகிபு சு. வி. கனகசபை பிள்ளையவர்களுக்கு எழுதிப் பெறுக.

---

# எட்டாவது அத்தியாயம்.

---

## புனர்ஜன்ம மீமாம்சை

### சில ஆக்ஷேபனை ஸமாதானங்கள்.

(277-வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி)

ஜீவனுக்கு பூர்வ ஜன்மங்களிருந்தால் அவைகள் இப்போது நமக்கு ஏன் ஞாபகமில்லை என்று ஒரு ஆக்ஷேபனை அடிக்கடிச் செய்யப்பட்டு வருகிறது.

ஞாபகமில்லாத தெல்லாம் நடக்கவே யில்லை என்று வாதிப்பது உசிதமல்ல. இந்த ஜன்மத்தில் நடந்த விஷயங்களெத்தனையோ நமக்கு இப்பொழுது ஞாபகம் இல்லை. அதைக்கொண்டு அவைகள் நடக்கவே இல்லை என்று சொல்லக்கூடாதவர்களாக இருக்கிறோம். யாருக்காகிலும் தான் மாத்ருகர்ப்பத்திலிருந்து பிறந்தது ஞாபகமிருக்கிறதா ? இன்னம் யுக்தவயது வந்த பிறகு நடந்த கார்யங்கள் எத்தனையோ நமக்கு ஞாபகமில்லை. அதைக்கொண்டு அவைகள் நடந்ததே யில்லை என்று சொல்லமாட்டோமல்லவா ? வெகு காலம் மறந்திருந்த விஷயங்கள் சிலது ஏதோ ஒரு ஸமயத்தில் ஞாபகம் வருவதுண்டு. அப்படிப்பட்ட விஷயங்கள் ஜீவனுடைய அந்தக்கரணத்துக்குள் உள்ளே எங்கேயோ நின்றே இருந்திருக்க வேண்டுமல்லவா? ஜாக்ரத் அவஸ்தையில் ஞாபகம் இல்லாமல் போயிருக்கலாம். ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு அந்த ஞாபக மில்லாமலிருக்கும்.

அதே மாதிரியாக பூர்வ ஜன்மங்களில் நடந்த விஷயங்கள் ஞாபகமில்லாததைக் கொண்டே ஜன்மங்களே கிடையாதென்று சொல்ல சாத்தியப்படாது. எந்தெந்த ஜன்மங்களில் எந்தெந்த அனுபவங்களை அடைந்தோம் என்று தனித்தனியாக ஞாபகமில்லாத போதிலும், அவைகளின் ஸாரமான ஞாபகம் வாஸனாரூபமாக உள்ளே நின்றே யிருக்கிறது.

ஆனாலும் ஞாபகமில்லாமலிருப்பதற்கு சரியான காரணங்களிருக்கின்றன. ஞாபகமில்லை என்றால் நமக்கு ஜாக்ரதவஸ்தையில் ஞாபகமில்லை யென்றர்த்தம். அதாவது ஸ்தூல சரீரத்தில் நாம் பிரவிர்த்திக்கும் காலத்தில் ஞாபகமில்லை என்பது ஸ்தூல சரீர சம்பந்தமான மூளையில் அந்த ஞாபகமில்லை. நித்யனான ஜீவனுக்கு தெரிந்தே இருக்கிறது. அப்படி என்றால் அந்த ஞானம் முழுமையும் விஜ்ஞான கோசத்தில் நின்றிருக்கிறது.

இப்போதைய ஸ்தூல சரீரம் (அன்னமயகோசம்) பிராண மய, மனோ மய, கோசங்களும் போன ஜன்மங்களிலிருந்திருக்க



வில்லை. இவைகள் ஜன்ம ஜன்மத்துக்கும் மாறுகிறவை என்று முன்னேமே எழுதப்பட்டது. அந்தக் காரணத்தால், முன் ஜன்மங்களினனுபவங்களுடைய ஞாபகம் இந்த ஸ்தூல சரீரத்தில் ஸ்பஷ்டமாக ஏற்படுவதற்குக்காரணமில்லை. ஒவ்வொரு ஜன்மத்திலு மழியாமலிருப்பது விஜ்ஞான மய கோசமாதலால் அந்தக் கோசத்தில் எல்லா ஜன்மங்களின் ஞாபகமுமிருக்கும்.

ஆனாலும், எவராகிலும், அந்தர் முகிகளாகி, இந்திரிய நிக்கிரஹமும், மனோ நிக்கிரஹமும், அப்பியாசம் செய்து ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களுக்கு ஸஹஜமா யிருக்கும் சஞ்சலத்தை தடுத்துச் சலிக்காமலிருப்பாரே யானால் அப்படிப்பட்டவர்களுக்கு விஜ்ஞான மயகோசத்திலடங்கி இருக்கிற பூர்வ ஞானமாகப்பட்டது அவர்களின் ஜாக்ரதாவஸ்தையில் கூடஸ்புரிக்கும். அப்படிப் பட்டவர்கள் ஜாதஸ்மார்களென்று வேதாந்த கிரந்தங்களில் சொல்லப்படுவார்கள். அப்படிப்பட்டவர்கள் கொஞ்சம் பேர்கள் இப்பொழுதும் லோகத்தில் ஜீவித்திருக்கிறார்கள். நாமும்கூட மேல் காட்டியபடி பிரயத்தினம் செய்தோமானால், சரியான காலத்தில் நமக்கும் அப்படிப்பட்ட பூர்வஜன்ம ஞாபகம் சாத்யமென்பதற்கு சந்தேஹமில்லை. எவ்வளவு காலம் நம் மனது பாஹ்ய விஷயங்களில் சுகித்துக் கொண்டிருக்குமோ, அது வரையில் உள்ளடங்கிய ஞானம் மனதிற்கு ஞாபகம் வருவதற்கு அவகாசமிராது. இந்த்ரியங்களையும், மனஸ்ஸையும் அவைகளுக்கு சொந்தமான வியாபாரங்களில் நிறுத்திச் சலிக்க விடாமல் செய்தால் நிச்சப்தமான பிரதேசத்தில் அதிஸூக்ஷ்மமான வீணாநாதம் ஸ்பஷ்டமாகக் கேட்கும் போல் அந்தரங்கமாக உள்ள பூர்வ ஞானம் வெளி ஞாபகத்திற்கு வரும். அப்படி இந்திரியங்களையும், மனஸ்ஸையும் நிச்சலமாகச் செய்வதற்குத் தான் யோகமென்று பெயர். கடோப நிஷத்தில் கூறப்பட்டபடி ஸ்திரமாக இந்திரியங்களை தாரணை செய்வதையே யோகம் யென்று சொல்லப்படுகிறது. இப்போது அப்படிப்பட்ட ஞானம் நமக்கில்லையே என்று விசாரப்படுவதற்குக் காரணமில்லை. அப்படிப்பட்ட ஞானம் ஜீவனுக்கு எப்பொழுது

ஸஹாய காரியாகுமோ அப்பொழுது அந்த ஞானம் தப்பாமல், வரும். நம்போலவர்கள், அஜ்ஞானதசையில் எவ்வளவு துஷ்கர்மங்களைச் செய்திருந்தோமோ அப்படிப்பட்ட கர்மத்துக்குப் பலனாக எவ்வளவு கஷ்டமும், துக்கமும் நாம் அனுபவிக்க வேண்டி இருக்கிறதோ அப்படிப்பட்ட ஞானம் நமக்கு உண்டானால், இன்னமும் அஜ்ஞான தசையிலிருக்கிறவர்களுக்கு அது அதிபயத்தை உண்டாக்கி அதைரியத்தைக் கொடுக்கும். ருணத்திலிருந்து விடுபடுவதற்கு இப்போது பிரயத்னம் செய்ய உத்ஸாஹமுண்டாக்காமல் உற்சாக மற்றவனாகச் செய்துவிடும். ஆகையால் தான், பரமதயாநிதியாயும். உலகத்திற் கெல்லாம் ஒரே பிதாவுமான ஈசுவரனுடைய ஏற்பாட்டினால், அந்த ஞாபகமானது நமக்கில்லாம லிருப்பதையே நம்முடைய புண்யமாக நினைக்க வேண்டும். பகவத் ஸங்கல்ப ஞானம் நமக்கு அதிகரித்துக் கர்மகதியின் இரஹஸ்யங்கள் தெரிந்து ஜாக்ரதையுடன் கர்மருணங்களைத் தீர்த்துக் கொள்வதற்கும், புதிதான துஷ்கர்மங்கள் மூலமாக உண்டாகும் ருணங்களைச் செய்யாமலிருப்பதற்கு வேண்டிய ஞானமும், ஸ்தைர்யமும் ஜீவனுக்குண்டாகவே, ஜீவனுக்குப் பூர்வ ஜன்ம ஞானம் தப்பாமலுண்டாகும். அப்படிப் பட்டவர்களுக்கு அந்த ஞானம் உதவி ஆகும். அந்த ஞானத்தின் ஸஹாயத்தால் மனஸ், வாக்கு, காயம், இவைகளால் கர்மங்களைச் செய்து பூர்வம் சேர்த்து வைத்த கர்மத்தை நசிக்கும்படி செய்துகொண்டும், புது ருணங்கள் செய்து கொள்ளாமல், தன்னுடைய உயிரை லோகத்துக்கு ஹிதம் செய்யும் பொருட்டே உபயோகப் படுத்திக்கொண்டு, செய்யும் காரியங்களையெல்லாம் ஈசுவர கைங்கர்யமாக நிவேதனம் செய்வார்கள். அப்படிப் பட்ட ஞானம் ஸமஸ்தமான கர்மத்தையும் பஸ்மம் செய்து விடுமென்று பகவத்கீதா சாஸ்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் போதிக்கிறார்.

## இந்த ஞானத்துப் பிரயோஜனங்கள்.

இந்த சித்தாந்தம் மிகவும் யுக்தி யுக்தமாக இருக்கிறது. லோகத்தில் காணப்படும் பல தாரதம்யங்களுக்கு ஸ்பஷ்டமாகக் காரணத்



தைத் தெரியப்படுத்துகிறது. சிரத்தையுள்ளவர்களுக்கு நிரம்பவும் உத்ஸாஹத்தை உண்டுபண்ணுகிறது.

ஏனெனில், இந்த சித்தாந்தத்தை உள்ளபடி அறிந்து திருடமாக நம்பினால் அந்த நம்பிக்கையும், அந்த ஞானமும் எவ்வளவோ பிரயோஜனத்தைத் தருமென்பதற்கு சந்தேகமில்லை. இந்த ஜன்மத்தில் ஒவ்வொருவனுடைய ஸ்வபாவமும் அவனுடைய பூர்வ ஜன்ம ஸம்ஸ்காரத்தால் கிடைத்திருக்கிறது. நடந்த ஜன்மங்களில், எந்த மாதிரியான ஸங்கல்பங்கள், எண்ணங்கள். கோரிக்கைகள் இப்போதைய ஸ்வபாவ ஸந்தர்ப்பங்களுக்குக் காரணங்கள் ஆயினவோ் தெரிந்துகொண்டு, இப்போதைய மனோ வாக்காய கர்மங்களை எப்படி சரிப்படுத்திக் கொண்டால் இந்த ஜன்மத்திலும் வரும் ஜன்மங்களிலும், கோரிய பலன்களை அடைவோமோ, அதை அறிந்து கொள்வது லாபகரந்தான்.

பூர்வ ஜன்மங்களில் எந்தெந்த விதமான ஸங்கல்பங்களும், கோரிக்கைகளும், எண்ணங்களும் நமக்கிருந்தனவோ, அந்தந்த விதமான சங்கல்பங்கள், கோரிக்கைகள், ஜீவனுடைய ஸ்திரமான உபாதியாக இருக்கிற விஜ்ஞானமய கோசத்தில் ஸ்தூல ஸூக்ஷ்ம தேஹ பீஜங்களான ஸூக்ஷ்ம பூதங்களில் முளைகளாக நின்று, பிற்பட்ட ஜன்மங்களில், அந்த குணங்கள் வாஸனா ரூபமாகக் காணப்படும். அதாவது பால்யம் முதல் அந்த ஸங்கல்பங்களும், ஆசைகளும், உணமையாகத் தென்படும். அதுதான் ஸ்வபாவ மென்பது. 'ஸ்வபாவம் பிறவிருத்திக்கின்றது' என்ற கீதா வாக்கியத்திற் கிதுதான் அர்த்தம். ஆனாலிப்போது நம் ஸ்வபாவத்தில், பூர்வ வாஸனா ரூபமாகத் துர்க்குணங்களும், கெடுதலான ஆசைகளும் காணப்பட்டால் அவைகளுக்குட்படாமல் அவைகளுக்கு எதிரிடையான நல்ல குணங்களையும், நல்ல கோரிக்கைகளையும் அடிக்கடி மனதில் தியானித்துக் கொண்டு, கொஞ்சம் சிரமம் அதிகமானாலும் கவனிக்காமல், அவைகளை பழக்கத்தபடுத்திக் கொண்டே வந்தால் துஷ்ட குணங்களும், கெட்ட ஆசைகளும் படிப்படியாகக் குறைந்து ஸத்குணங்களும் நல்ல கோரிக்கைகளும்

தமிழ்நாடு 210797

காலக்கிரமத்தில் விருத்தியாகும். இப்படி மனதைச் சேர்ந்த பூர்வ துஷ்டகர்மத்தை தியானத்தால் நசிக்கச் செய்து கொள்ளலாம். இப்போது செய்யும் பிரயத்னத்தால், வரும் ஜன்மங்களில் முன் ஜன்மத்திய அசுபவாஸனைகள் குறைந்து போய் நல்ல குணங்களும் கோரிக்கைகளும் ஆதியிலிருந்தே வாஸனா ரூபமாகக் காணப்படும். பூர்வ ஜன்மங்களின் அப்பியாஸ பலத்தால் அந்த மார்க்கத்திலேயே நடப்பது ஸ்வபாவமாகுமென்று கீதா சாஸ்த்ரம் போதிக்கிறது.

இதே மாதிரி ஒரு ஜன்மத்தில் எதாகிலுமொரு சாஸ்திரத்தை அதிகமாக சர்ச்சித்து அப்பியாஸம் செய்தால் பிற்பட்ட ஜன்மங்களில் பால்யம் முதல்கொண்டே சாஸ்திரத்தில் அதிக ருசி உண்டாவது மல்லாமல் அந்த சாஸ்த்ரத்தை ஸுலபமாகக் கிரஹிக்கும் சக்தியுமுள்ளவனாவான். சிலர் ஒரு சாஸ்த்ரத்தில் அதிகத் தேர்ச்சி யடைந்தவர்களாக இருந்தும், மற்றொரு சாஸ்த்ரத்தில் கொஞ்சமேனும் பிரவேச மில்லாமலிருப்பது நமக்கு அனுபவத்திலேற்பட்டிருக்கிறது. எந்த சாஸ்த்ரத்தில் பூர்வப் பிரயத்னம் அதிகமாகச் செய்யப்பட்டதோ அதில் அதிக ஸாமர்த்தியமும் ருசியும் பிறப்புடனே வரும். அப்படியே இப்போது அப்படி இதர சாஸ்த்ரத்தில் அதிகப்பிரயத்னம் செய்தால், ஆதியில் கொஞ்சம் கஷ்டமிருந்த போதிலும், கிரமேண அதிலும், அபிருசியும், சிரத்தையும் ஜாஸ்தியாகி காலக்கிரமத்தில் பிரவீணனாவான். முடிவில் ஸர்வஜ்ஞனாவதற்கும் இதுதான் உபாயம்.

தேகத்தால் செய்யும் கர்மங்கள் கூட இதே மாதிரியாக, எந்தெந்தக் கார்யங்களை அதிக ஊக்கத்துடன் செய்து வருவானோ அந்தந்தக் கார்யங்களில் பின் ஜன்மங்களில் அதிக ருசியும் சாமர்த்தியமுமுள்ளவனாவான். நல்ல பழக்கங்களுடைத்தாய், கால நியமம் தவறாமல் வேலைகள் செய்கிறவன் பிந்திய ஜன்மத்திலப்படியே சிறு பிராயம் முதல் காலம் தவறாமல் வேலைகளைச் செய்யும் ஸ்வபாவமுள்ளவனாவான். அப்படி இல்லாமல் சோம்பேறியாக இருந்தால் மறுபடியும் சோம்பேறியாகவே பிறப்பான். இதுவும்



அன்றி, நாம் செய்யும் வெளிக் கார்யங்களால், பிறர்களுக்கு ஸுகமோ துக்கமோ உண்டாகும். பிறர்களுக்கு ஸுகத்தை உண்டுபண்ணின ஜீவனுக்கு அடுத்த ஜன்மங்களில் ஸுகத்திற்கு ஸாதனமாகும் நல்ல ஸந்தர்ப்பங்கள் நேரிடும். பிறர்களுக்கு வித்யாதானமும் ஞானோபதேசமும் செய்தால் மறு ஜன்மத்தில் கோரின வித்யைகளைக் கற்றுக்கொள்ளத் தகுந்த ஸஹாயமான அமைப்புகளுடன் பிறப்பான். வித்யாவந்தனாக விருந்தும், ஆசிரயித்துவந்த வித்யார்த்திகளுக்கு வித்யையைச் சொல்லிக் கொடுக்காமல் லோபியாக இருந்தால் பிந்தின ஜன்மத்தில் அனுகூலமில்லாத ஸந்தர்ப்பங்களில் பிறப்பான். தான் வித்யையைக் கற்றுக் கொள்ள வேணுமென்ற தீவிரமான ஆசையுள்ளவனாக விருந்தாலும், அவன் வித்யையைக் கற்க அனுகூலமில்லாமல் கஷ்டப்படும்படி வரும். அல்லது தான் வித்யாவந்தனாய் பிறர்களுக்குப் போதிக்க வேண்டுமென்ற ஆசை இருந்தும்கூட, இதரர்களுக்குப் போதிக்க அனேகவிதமான ஆடங்கங்கள் உண்டாகித் தன் மனப்போக்கு ஈடேறாமல் போய்விடுவான். இதரர்களுக்கு ஸுகமுண்டாக்கினால் அடுத்த ஜன்மங்களில் ஸுகப் பிராப்தியும், இதரர்களுக்குத் துக்கத்தை உண்டாக்கினால் துக்கப் பிராப்தியும் கர்ம பலன்களாம்.

இப்படிக் கர்மகதியைத் தெரிந்து கொண்டு, பிரதி ஜன்மத்திலும் ஜாக்ரதையாக நடந்து கொண்டால், ஜீவன் ஒவ்வொரு ஜன்மத்திலும், ஞானத்திலும், சக்தியிலும்; அபிவிருத்தியாய், காலாந்தரத்தில் பரிபூர்ணனாவான். தான் பரிபூர்ணனாவதால் சோதரர்களான, ஜனங்களெல்லோரையும் பரிபூரணர்களாகச் செய்ய ஸஹாயம் செய்யக் கூடியவனாவான்.

ஆனாலும் ஒரு எச்சரிக்கை. "அனேக ஜன்மங்களிருக்கிறதல்லவா? அவசரப்பட வேண்டாம். இந்த ஜன்மத்திலாகாமற் போனால் ஜன்மங்கள் தான் எத்தனையோ இருக்கின்றனவே கஷ்டப்பட வேண்டிய அவசரமில்லை" யென்று சோம்பேறித் தனத்தைத் தலையின் பேரில் போட்டுக்கொள்ளக் கூடாது. அப்படிச்

செய்பவர்களுக்கு ஜன்ம ஜன்மத்திற்கும் அந்தச் சோம்பேறி ஸ்வபாவம், பலமாகி கார்யத்தில் உத்ஸாகம் க்ஷீணித்துக்கொண்டேவரும். கஷ்டங்களுக்கு அகப்பட்டவனானாலும், பௌருஷத்துடன் பிரயத்னம் செய்வது கஷ்டமாகத் தோன்றிக் கஷ்டங்களிலும், துக்கங்களிலும் மூழ்கிக்கொண்டும் மிதந்துகொண்டு மிருக்கும்படி நேரிடும். அந்தச் சோம்பலுக்குப் புருஷார்த்தம் பங்கமாகி விடுவது தான் பலன். சோதரர்களே! அப்படித் தமோ குணத்திற்குட்படாமல் உற்சாகத்தால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிருதார்த்தர்களாகி இதரர்களையும் கிருதார்த்தர்களாக்க அதிக ஜாகிரதையுள்ளவர்களாகப் பிரயத்தனப்படுவீர்களாக! மஹாத்மாக்களின் தர்மமிதுதானென்று சாஸ்திரங்களெல்லாம் முறையிடுகின்றன.

சாந்தர்களும், மஹாத்மாக்களும் எப்பொழுதும் வஸந்தனைப் போல் லோகஹிதத்திற்காகவே, சரித்துக்கொண்டு ஜீவித்திருக்கிறவர்கள் தாங்கள் அஜ்ஞான ஸமுத்ரத்தைத் தாண்டியும், காரணமில்லாமலே இதரர்களைத் தாண்ட வைப்பதற்காகக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். என்பது விவேக சூடாமணி.

தாங்கள் இடைவிடாத முயற்சியால் ஸம்ஸாரக் கடலைத் தாண்டி அதாவது அக்ஞானத்தையும், அதனால் உண்டாகும் தன்னுடைய லாபத்திலேயே நோக்கம் கொள்வதையும், காமக்குரோதங்களையும் ஜயித்து, ஸர்வ பூதங்களின் ஹிதத்தையே பரமாதர்சமாக நினைத்து, லோகோபகாரத்திற்காகவே தங்களுடைய ஸர்வ சக்திகளையும் வினியோகப்படுத்தும் மஹானுபாவர்களே, பாரத புத்திர ரத்னங்களென்று பிரஸித்தியடைந்த பூர்வீகர்கள். அவர்களையே கண்ணாடியாக வைத்துக்கொண்டு அவர்கள் போன வழியில், என்னைச் சேர்ந்தவர்கள், அன்னியர்கள் என்ற அற்பமான எண்ணங்களை விட்டுப் பகவானுடைய மக்களாகிய ஸகல ஜீவர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பிரயாசை எடுப்பீர்களாக!

(தொடரும்)

ஏ. ராமசுவாமி சாஸ்திரி.

# ஸாசீவஸ அல்லது உண்மையின் வெற்றி.

(283-ம் பக்கத் தொடர்ச்சி)

## காட்சி—அரண்மனை கஜானா

பிரவேசம்—சடாபதி, அரசன்.

சபா:—அடே மடையா, என்ன புத்திசாலியடா நீ? இந்தத் தொழிலில் கொஞ்சம் கூடப் பரிச்சயமில்லாதவன் போல் காணப்படுகிறாய்.

துக்கடா

(முன் பின் திருடின துண்டோ)

இவ்வளவு பெரிய மூட்டையைக் கட்டினால், நீ எப்படி சௌகரியமாய் வெளியில் போவாய், எப்படி வேகமாய் நடக்க முடியும், யாராவது கண்டால் சந்தேகப்பட மாட்டார்களா, தப்பித்தவறி கீழே விழுந்தால் ஓசை கேட்காதா? நாம் திருடப்பட்ட சாமான் ஆகிருதியில் சிறியதா யிருக்கவேண்டும், சுலபமாய் மறைத்துக் கொள்ளத் தக்கதா யிருக்க வேண்டும், ஆனால் விலையுயர்ந்ததா யிருக்கவேண்டும். அதோ அந்தப் பெட்டியில் நவரத்தினங்களிருக்கின்றன. ஒவ்வொரு ரத்தினமு மதிக விலையுள்ளது. அதில், பத்து, இருபது, முப்பது, ரத்தினங்களெடுத்துக் கொண்டு போனாலு மெளிதில் மறைத்துக் கொண்டு போகலாம், ஒரு பெரிய பவுன் மூட்டையைக் காட்டிலு மதிக விலையுமுண்டு. அந்தப் பெட்டியிலிருந்து ஒவ்வொரு தினுசு ரத்தினத்திலும் நீ ஐந்து எடுத்துக் கொள். எனக்குமைந்து கொடு. (அரசன் அப்படியே செய்கிறான்)

அந்த மூட்டையை யவிழ்த்துப் பவுன்களையவைமுன்னிருந்த விடத்திலேயே சேர் (அரசனவ்விதமே செய்கிறான்)

சபாபதி யெழுந்து தன்னிடமுள்ள ஒரு கொத்துச் சாவியைக் கொண்டங்குள்ள பெட்டிகளை யொவ்வொன்றாகத் திறக்கிறான்)

அடே, தம்பி நமது மஹாராஜா நல்ல பாக்கியசாலி யென்பதிற் சந்தேகமில்லை. எவ்வளவு ஏராளமான திரவிய மிருக்கிறது பார்த்தாயா? விலை மதிக்கக் கூடாத ரத்தினங்களிழைத்த நகைகள், பலவகை வைர, வைடூரிய, கோமேதக பச்சைக் கற்கள், கணக்கிட மாளாத தங்க நாணயங்கள், இவைகளெல்லாம் லக்ஷ்மீ கடாக்ஷம் பெறாதவர்களுக்குக் கிடைக்குமா?

(ஒரு பெட்டியைத் திறந்து பார்த்துக் கொண்டு) இதென்னடா விசேஷம்? இந்தப் பெட்டியில் நகைகள் ரத்தினங்களொன்றையும் காணோம். ஒரு சிறிய தங்கப்பெட்டி யிருக்கிறது, இதற்கு பந்தோபஸ்து செய்யவா இவ்வளவு பெரிய இரும்புப் பெட்டி? (தங்கப் பெட்டியை யெடுத்துத் திறக்க உள்ளே ஒரு தந்தப் பெட்டி யிருக்கக் கண்டு) நன்றாக வேலை செய்த பெட்டி யிந்த தந்தப்பெட்டி பார்க்க யெவ்வளவு ரமணீயமா யிருக்கிறது! இதற்குள்ளென்னடா யிருக்கக்கூடும்?

(திறந்து பார்த்து) தம்பி, நாமிதுவரையில் பார்த்தது பெரிதல்ல. இந்த மூன்று ஜதைக் கடுக்கன்களைப்பார். இந்தக் கற்களுக்கு விலையிட முடியாது. இந்த வைர ஜதையை நானெடுத்துக் கொள்ளுகிறேன். நீ இந்த சிவப்புக் கல் ஜதையை யெடுத்துக் கொள். இந்தப் பச்சைக் கல் கடுக்கன்கள் நமது மஹாராஜாவுக் கிருக்கட்டும்.

அரு:—என்னத்திற் கண்ணே, அதை மட்டும் வைத்துவிட வேண்டும்? அதை நாமெடுத்துக் கொண்டு போகும் பக்ஷத்தில் வேறொன்றும் நமக்கு வேண்டாமே. பங்கு பிரிப்பதும் கடினமல்ல, ஜோடியா யிருப்பதால் நாமாளுக் கொன்றாகப் பிரித்தெடுத்துக்கொண்டு போகலாம். ஆகையால்—



சபா:—அடே, நான் சொல்லுகிறேன் கேள். (அந்தப் பச்சைக் கடுக்கன்களை மறுபடியு மந்தப் பெட்டியிலேயே வைத்து முன்னிருந்த மாதிரி எல்லாப் பெட்டிகளையும் பூட்டிவிடு) தம்பி, நாமெந்த விருத்தியிலிருந்த போதிலும் தர்மத்தை நம்மாலான வரையில் கைவிடக்கூடாது. நம்முடைய ஜீவன விருத்தி நமக்கேற்படுவது நம்முடைய இச்சையாலல்ல. முன் ஜன்மங்களில் நாம் செய்திருக்கிற கர்மத்திற்குத் தகுந்தபடிக்கும், அநேக ஜீவன்களோடு நாமேற்படுத்திக் கொண்டிருக்கிற பந்தங்களுக்குத் தகுந்தபடிக்கும், நமக்குப் பிறவியும், தாய் தகப்பன் சுற்றத்தார்கள் முதலியவர்களும், ஜீவன விருத்தியு மேற்படுகிறது. ஆனால் நமக்கெந்த விருத்தி யேற்பட்டாலுமதில் நாம் தர்மம் தவறாமல் நிற்பது நம்முடைய ஸ்வயேச்சை. இதை நீ நன்றாய் ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் விதி என்பதற்கும், நம்முடைய இச்சைக்குமுள்ள பரஸ்பர ஸம்பந்தம் நன்கு விளங்கும். இந்தத் திருட்டுத் தொழில் வெகு ஈனமான தொழில்தான், ஆனாலிதிலுமிரண்டு விதமுண்டு.

சாவேரி—ஆதி.

இரண்டு விதங்களுண்டு திருடுவதிற்கூட
தருமக்கள வென்றும தருமக்கள வென்றும்
இருவிதக்களவினில் தருமக்கள விதுகாண்
களவிடப்படும் சொத்துக் காரனையும் பங்குக்
காரனாகவே தான் கருதுவது தர்மம்.

மேலு மேழைகளுடையவும், ஸ்திரீகளுடையவும் சொத்துக்களை யபகரிக்கக் கூடாது. கூடுமானாலவர்களுக்கு நம்மாலான வரையில் உதவி புரிவது தர்மம். பிறரை ஹிம்சித்து ஏழைகளின் சொத்துக்களை சட்டத்திற்குள்ளகப்படாத வண்ண மபகரித்து ஏராளமாக பணம் சேர்த்து அதைத் தனது சுகத்தின் பொருட்டே செலவு செய்கிற பாபிகளின் சொத்துகளைக் கொள்ளையிடுவதை

லவ்வளவு பாதகமில்லை. கொள்ளையிட்டாலும் நான் முன்னே
சொன்ன மாதிரி சொத்துக்காரனுக்கும் ஒரு பாகம் வைத்து
விட்டுப் போகவேண்டும். இப்படி ம் செய்து வருவோமானால்
நமக்குத் தீங்குவராமலீசன் காப்பார். அப்படி யில்லாமலதிக ஆசைப்
பட்டுக் கண்டபடி திருடுவோமானால் சீக்கிரத்தில் நமக்குத் தீ கு
விளையும். தம்பி சொல்லுகிறேன் கேள். நானிந்தத் தொழிலை
மேற்கொண்டது நானாசைப்பட்டு முழுமனதுடன் செய்ததல்ல
வேறு வழியில்லாமலித்தொழிலைக் கைக்கொண்டேன். நியாயம்
தவறாமல் ஜீவனம் செய்ய முடியுமா வென்றெவ்வளவோ தேடித்
திரிந்து பார்த்தேன். அப்படிப்பட்ட தொழிலொன்று மெனக்குக்
கிடைக்கவில்லை. ராஜாங்க உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு சம்
பளம் சரியாக வருகிறதா, தங்களுடைய ஆபீஸ காரியங்கள் சரி
வர நடைபெறுகின்றனவா என்பதைக் கவனிப்பது மல்லாமல்
இந்த ராஜ்யத்திலுள்ள சகல ஜனங்களும் ஒரு குறைவின்றி
சௌக்கியமா யிருக்கிறார்களா, எந்த இடத்திலென்னென்ன சீர்திருத்
தங்கள் செய்ய வேண்டியிருக்கின்றன, எங்கெங்கே பிழைக்க வழி
யில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற ஜனங்களிருக்கிறார்க
ளென்பதையும் விசாரித்து அததற்குத் தகுந்தபடி குறைகளை நீக்க
ஏற்பாடு செய்ய வேண்டும். பிழைக்க வழியில்லாதவர்களுக்கு
பிழைக்கும் வழியைக் காண்பிப்பது தர்ம ராஜாங்கத்தினது முக்கிய
மான கடமை. ஆனாலிந்தப் பழுதுகளை யெப்படி யவைகளுக்குப்
பரிஹாரம் செய்வது என்கிற விஷயங்களைப்பற்றி அபிப்பிராயம்
சொல்ல நானர்கனல்ல, கடமைப்பட்டவனுமல்ல; அது ராஜாங்
கத்தின் வேலை. இப்போது இந்த ராஜ்யத்தில் ஏராளமான திரவி
யத்தை வைத்துக்கொண்டு அதையென்ன செய்கிறதென்று தெரி
யாமல் கெட்ட காரியங்களில் பிரவிருத்திப்பதிலேயே ஊக்க
முடைய அநேகரிருக்கிறார்கள்; அதே மாதிரி என்னைப் போல்
கையிலொரு காசுமில்லாமல், கடன் கொடுப்பார் யாருமில்லாமல்,
உயிரை யெப்படிக் காப்பாற்றுகிறதென்று தெரியாமல், கஷ்டப்
படுகிறவர்களு மநேகமுண்டு. இப்படிப் பட்டவர்களென்ன செய்



வார்கள்? வேறு வழியில்லாமல் பிறரை ஹிம்சித்துத் தங்களைக்
காப்பாற்றிக் கொள்ளும்படியான இந்த மஹாஹீனமா யிருக்கப்
பட்ட திருட்டுத் தொழிலை மேற் கொள்கிறார்கள். ஆனாலெவ்வ
ளவோ பேர்கள் இந்த மாதிரியான திருட்டுத் தொழிலை பிறருக்
குத் தெரியா வண்ணம் வேஷம் போட்டு பகிரங்கமாகச் செய்
கிறார்கள்; அவர்களைப் பெரிய மனிதர்களென்று உலகமும் புகழ்
கிறது, சமாசாரப் பத்திரிகைகளு மவர்களைத் துதிக்கின்றன,
ராஜாங்கக்காரர்களு மநேக பட்டங்களை யவர்களுக்களிக்கிறார்கள்.
அப்படி வேஷம் போட்டு திருடுவதைக் காட்டிலும் நம்மைப்போல்
திருடுவது எவ்வளவோ சிலாக்கியமானது. இதினுண்மையை
யறிந்து, வாஸ்தவத்தில் யார் கஷ்டப்படுகிறார்கள் என்பதைத்
தெரிந்து, அதை நிறுத்த ஏற்பாடு செய்ய வேண்டியது ராஜ்ய
பாலனஞ் செய்வோரின் தர்மம். அதை யவர்கள் செய்யத் தவறுவ
தாற்றான் என்னைப்போலொத்தவர்களித்தகைய கெட்ட தொழில்
களிற் பிரவேசிக்க வேண்டி யிருக்கிறது. நான் செய்யும் தொழிலா
லுண்டாகிற பாவம் முழுதும் என்னைச் சாராது, தன் தொழிலைச்
சரியாய் செய்யாததா லேற்படுகிற இந்தப் பாபத்திற்குப் பெரும்
பாலும் கட்டுப்பட்டவர்களந்த உத்தியோகஸ்தர்களே, தம்பி, நமது
மஹா ராஜாவுக் கிதெல்லாம் தெரியாது; கீழதிகாரிகளவருக்
கிதொன்றும் தெரியாம லொளித்து வைத்திருக்கிறார்கள். நாம்
நேரிலிவ்விஷயங்களை யரசனுக்குத் தெரியப்படுத்தவும் முடியாது.
அப்படி யாராவது பிரயத்தனம் செய்வதாய்த் தெரிந்தா லவனை
யுடனே சகல அதிகாரிகளு மொருங்கு சேர்ந்து ஹிம்சிப்பதுமன்றி
ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி சிறையிலிட்டடைப்பார்கள்.
நமது மஹாராஜாவுக்கிது தெரிந்தாலிதைக் கட்டாயம் நிறுத்துவார்.
அதி லெனக்குச் சந்தேகமில்லை. அவர் மனது நல்ல மனதாகத்தா
னிருக்க வேண்டும், இல்லாமற் போனால் வருக்கு லக்ஷ்மீகடாக்ஷ
மிவ்வளவு பரிபூர்ணமா யிருக்காது. அப்படிப்பட்ட காருண்ய
மூர்த்தியைக் கண்டு மஹாராஜாவுக்கித்த பச்சைக்கற் கடுக்கன் அது
அவருடைய பங்கு, அதை நாமவருக்கு வைத்துவிட்டுத்தான், போக

மநேக அதிகாரிகளு மிதைப் பரிசோதிக்க வருவார்கள். உண்மையும் வெளியாகும். திருடர்களைக் கண்டு பிடிக்க வழி தேடுவார்கள். வீணா யொருவர் மீது பழி யேற்படாது...காலதாமதமாகின்றது. உள்ளே வந்தபடியே வெளியே போக வேண்டும். வா, என் பின்னால்.

(திரைவிழுகிறது)

ஆர். ஸ்ரீனிவாசய்யர் எம். ஏ.,

(தொடரும்)

---

# தைவீ ஸம்பத்து

## 12. அக்ரோதம்

'க்ரோதம், என்ற ஸம்ஸ்கிருத வார்த்தைக்கு கோபம் என்று அர்த்தம். அக்ரோதம் என்றால் கோபமின்மை என்று அர்த்தம்.

நம்மில் கோபம் இன்னதென்று தெரியாதவர்கள் இரார். ஏதோ ஒரு சமயத்திலாவது கோபம் அடையாதார்களுமில்லை. பிறருடைய கோபத்துக்கு ஆளாகி இருக்காதவர்களுமில்லை யென்றே சொல்லலாம். கோபம் என்பது மிருகங்களுக்கும் அவைகளுக்கு கீழ்ப்பட்ட பிராணிகளுக்கும் ஸாமான்யமாயுள்ள குணம். விகாஸ முறையின்படி மானிடப் பிறவியை அடைந்தபின்கூட மிருகங்களைப் போல தன்னயம் பாராட்டும் தன்மை நம்மிடமுள்ள வரையில் கோபமும் நம்மை விட்டு விலகாது. ஏனென்றால் 'காமாத்க்ரோதோ பிஜாயதே' என்றபடி ஆசையுள்ளவனாயில் கோபமுண்டு. நம்முடைய ஆசை நிறைவேறுவதற்கு தடை செய்கிறவர்கள் பேரில் தான் நமக்கு நம்முடைய ரஜோகுணத்தின் பயனாகக் கோபம் வருகிறது. தன்னயத்தைத் தேடும் ஆசை தேயத் தேயக் கோபமும் குறையும்.

நம்முடைய ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களை உத்தேசித்துப் பார்த்தாலும், அவைகளுக்குள் அந்தர்யாமியாக இருக்கும் நம்முடைய ஆத்மாவை உத்தேசித்துப் பார்த்தாலும், கோபமானது நம்முடைய முன்னேற்றத்துக்கு எப்போதும் பிரதிகூலத்தையே செய்யும். கோபம் வந்த காலத்தில் நம்முடைய முகம் சிவந்து போகிறது, கண்கள் கலங்கிப் போகிறது. உதடுகள் துடிக்கிறது, உடல் நடுங்கிறது. நெஞ்சு படபடக்கிறது. பெருமூச்சு எரிகிறது. அங்கமெல்லாம் கொதிக்கிறது. நல்லறிவு போய் விடுகிறது. இவ்வளவுக்கும் காரணம் நம்முடைய சரீரத்திலுள்ள நாடிகளும் நரம்புகளும் நம்முடைய கோபாக்கிரகத்தால் அளவுக்கு மிஞ்சி தூண்டப்

படுவதுதான். கோபம் அடங்கினவுடன் நாடி நரம்புகள் தளர்ந்து ஒருவிதமான சோர்வு உண்டாகிறது. அடிக்கடி இந்த மாதிரி கோபத்திற்கு இடங் கொடுத்தோமானால் வர வர தேக சௌக்கியம் குறைவது மல்லாமல் நம்முடைய வாழ்நாளும் குறுகிப்போம். நம்முடைய கோபத்துக்குப் பாத்திரர்களாக இருந்தவர்கள் பேரில் எல்லாம் அன்பு குறைந்து த்வேஷம் அதிகமாகி அதனால் நம்முடைய சூக்ஷ்ம சரீரங்களும் முன்னேற்றத்துக்கு உரித்தாகாமல் போய் விடுகிறது. அன்பே உருவமாயுள்ள ஈசுவரத் தன்மையை அடைய நம்முடைய ஆத்மாவுக்கும் சாத்தியமில்லாமல் போகிறது.

க்ரோதத்தையும் அதற்கு உத்பத்தி ஸ்தானமான காமத்தையும் நமக்குச் சத்துருக்கள் என்று சொல்வதுண்டு. மனிதர்களுடைய காமக்ரோத லோபமோஹமதமாத் ஸர்யம் என்னும் ஆறு அந்தரங்க சத்துருக்களில் காமமும் க்ரோதமும் முக்கியமானவை. நம்முடைய கண்ணுக்கு புலப்படாமல் நமக்குள் மறைந்திருக்கும் அந்த அந்தரங்கச் சத்துருக்களை ஜயிப்பது கஷ்டம். ஆகையால் தான் திருவள்ளுவனார் 'தன்னைத் தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்' என்றார். அதாவது ஒருவன் தன்னைத் தன் வெளிப்பட்டயான சத்துருக்களிடமிருந்து காப்பாற்றிக் கொண்டால் போதாது. மேலே கண்ட அந்தரங்கமான ஆறு சத்துருக்களில் முக்கியமான கோபத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும் இல்லாவிட்டால் அவனுடைய கோபமே அவனுடைய நாசத்துக்குக் காரணமாய்விடும் என்பது கருத்து. பகவத் கீதையின் 3-வது அத்தியாயத்தில் காமக்ரோதங்களை நம்முடைய நித்ய வைரிகளென்றும் நம்முடைய அறிவை அழிக்கும் தன்மையுள்ளவை யென்றும் ஆகையால் அவைகளை நாம் ஜயித்துக் கொல்ல வேண்டு மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

கோபத்துக்கு 'மன்யு' என்றும் ஒரு பெயர் உண்டு. 'மன்யுர் கார்ஷித்' 'மன்யு: கர்த்தா' 'மன்யு: காரயிதா' என்ற வாக்கியங்களி



லெல்லாம் நாம் செய்கிற சகல பாபங்களுக்கும் கோபமே காரணமென்பதையும் அதுதான் பாவங்களைச் செய்யும்படி நம்மைத் தூண்டுகிற தென்பதையும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஸந்தியோபாஸனை செய்கிறவர்கள் பிரதிதினமும் 'மன்யு க்ருதேப்ய: பாபேப்யோ மாம் ரக்ஷந்தாம்' அதாவது கோபத்தால் நான் செய்த எல்லா பாவங்களின்றும் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று செய்யும் பிரார்த்தனையாலும் அது நன்றாய் விளங்கும்,

ஈசுவரத்தன்மை பொருந்திய பெரியவர்களுக்கு அவர்களுடைய குணங்களைப்பற்றி வந்த காரணப் பெயர்களில் ஜிதக்ரோதர்கள் அதாவது கோபத்தை ஜயித்தவர்கள் என்பது ஒன்று. ஆகவே பாவங்கள் நீங்கி நாம் முன்னேற்றம் அடைய வேண்டுமானால் கோபத்தை ஜயித்து அக்ரோதம் என்ற கோபமின்மையைக் கைக்கொள்ள வழி தேடவேண்டும். அதற்குப் பொறுமை என்னும் அரிய குணத்தைச் சிறுகச் சிறுகப் பயிற்சி செய்வதான ஒரே வழி தவிர வேறில்லை. நம்மைக் காட்டிலும் வலியவர்கள் நம் பேரில் கோபம் கொண்டால் நமக்கு எப்படி இருக்கிறதோ அப்படித் தான் நம்முடைய கோபம் செல்லக்கூடிய மெலியாரிடத்து நாம் கோபம் கொள்ளும்போது அவர்களுக்கும் இருக்கும், நாம் கோபம் கொள்வது பிசகு என்று கோபம் தணிந்த பின் நமக்குப் பச்சாத்தாபம் ஏற்பட ஏற்பட நம்முடைய விஷயங்களில் நமக்குக் கோபமின்மை அதிகரிக்கும்.

ஆனால் பலமற்ற ஸாதுக்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் சிறுவர்களுக்கும் அக்கிரமமாய் கெடுதி செய்யும் துஷ்டர்களின் பேரில் நமக்கு உண்டாகும் கோபம் நம்முடைய சொந்த விஷயங்களில் நாம் கொள்ளும் கோபத்தைவிட ஒருபடி மேலானதுதான் ஆகையாலே தான் ஸாதுக்களை ஸம்ரக்ஷித்து துஷ்டர்களை நிக்கிரஹம் செய்வதைக் கடமையாகக் கொண்ட ராஜாக்களுக்கு அவ்வி, மதன கோபத்தை ஒரு சிறந்த குணமாகவே எடுத்திருக்கிறார்கள்

ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியுடைய கல்யாண குணங்களில் கோபத்தில் காலாக்னிக்கு ஒப்பானவர் என்பதை ஒரு குணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது ஸாதுக்கள் விஷயமாய் துஷ்டர்கள் பேரில் கொள்ளும் இந்த கோபத்தைக் குறித்துத் தான் சொல்லப் பட்டிருக்கிறது. அய்படிக் கில்லாமல் அளவில்லாத அதிகாரத்துடன் கூடிய அரசர்களே சொந்த விஷயத்திலாவது, ஸாதுக்கள் பேரிலாவது காலாக்னிபோன்ற கோபம் கொள்வார்களானால் நம்மைப் போன்றவர்களுடைய கதி எல்லாம் என்ன ஆகும். தன்னயத்தை உத்தேசிக்காமல் பிறர்களை காப்பாற்றும் பொருட்டு பெரியவர்களுக்கு உண்டாகும் கோபம் வில்லால் அடியுண்ட ஜலத்தில் உண்டான காயம் எவ்வளவு சீக்கிரமாக மறைந்து போகுமோ அவ்வளவு சீக்கிரமாக மாறிவிடும். துவேஷ புத்தி தங்கி நின்று நித்யவைரம் ஏற்படாது. நமக்கு பரிபாகம் அதிகமாய் ஏற்பட ஏற்பட அவ்விதமான கோபத்தைக்கூட ஜயித்து விடலாம். அநாதர்களான ஸாதுக்களை அநியாயமாய் துன்பப் படுத்துகிறவர்களிடத்திலும் நாம் கோபம் கொள்ளாமல், அவர்களும் நம்முடைய இளைய சகோதரர்களென்றும், நாமும் அவர்களைப்போல ஒரு காலத்திலிருந்தோம் என்றும் அவர்களும் விவேகம் அதிகமாய் உண்டாக உண்டாக காலக்கிரமத்தில் நம்மைப்போலாவார்கள் என்றும் எண்ணி அவர்களிடத்தில் கருணைகொண்டு, அவர்களுடைய அவிவேகத்தைப் போக்கி, அவர்களினி அந்த மாதிரி செய்யாமலிருப்பதற்கான புத்தியையூட்டி, அவர்களை நல் வழிப்படுத்த வேண்டும். அதுவே ஜிதக்ரோதர்களான பெரியவர்கள் போகும் வழி. அந்த வழியை நாடினாம் போகப் போக அவர்களைப் போல நாமும் அக்ரோதம் என்னும் தைவீ ஸம்பத்து பொருந்தினவர்களாவோம்.

**வி. விசுவநாதய்யர் பி. ஏ., பி. எல்.,**

*ரிடையர்ட் ஹைகோர்ட் வக்கீல், மதுரை.*

# வியாசகம்.

## கல்வி கற்பித்தல் ஒரு கைங்கர்யம்.

---

ஆசிரியர்—ஜே. கிருஷ்ணமூர்த்தி—தமிழ்ப் படுத்தியவர் மு. சுவாமிநாதய்யர்-அடையாறு பிரம்மஞ்ஞானத் தமிழ் பிரசுரச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டது. இரண்டாம் பதிப்பு.

விலை அணா 0—8—0

இப்புத்தகத்தின் முத நூல் ஆங்கிலத்தில் ஸ்ரீமான் ஜே. கிருஷ்ணமூர்த்தியால் அவாது சிறு பிராயத்தில் வெளியிடப்பட்டது. அன்னவருக்கு அவாது குருநாதர் உபதேசித்தருளிய சாதன சதுஷ்டயங்களை கல்வி கற்பித்தல் எனனும் கைங்கரியத்தில் எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்று உலகிற்கு எடுத்துக் காட்டிய புத்தகமாகும். அப்புத்தகத்தைப் படிக்கும பாக்கியம் பெற்ற ஒவ்வொருவரும் அக்கற்பினையின் மேன்மையையும் ஆங்கில நடையின் தெளிவையும், நன்குணர்ந்து அக்கற்பினைகளை ஒவ்வொரு உபாத்தியாயரும் பின்பற்றி யொழுக வேண்டும் என்று விரும்பினார்கள். அப்புத்தகத்தின் உபதேசங்களையே பிரஹ்மஞான சபையாரால் நடத்தி வரப்படும் கலாசாலைகளில் அனுஷ்டித்து வாலானார்கள். அடையாற்றிலிருக்கும் உயர்தரப் பள்ளியிலும் மதனப்பள்ளிக் கலாசாலைகளிலும் காசிக் கலாசாலைகளிலும் மற்ற சில கலாசாலைகளிலும் உபாத்தியாயர்கள் மாணவர்களைத் தம் மக்களைப்போல் பரிவுடன் வளர்த்து வருவதற்கும், அப்பள்ளிகளில் மாணவர்கள் செழித்துக் களித்து அபிவிருத்தி யடைவதற்கும் இப்புத்தகமே காரணமாகும். அப்பள்ளிகளின் மேன்மையைக் கண்டு மற்ற பாடசாலைக் காரர்களுக்கும் [illegible] மேன்மைக்குக் காரணமான இப்புத்த

## சமாசாரம்.

தென்னாற்காடு ஜில்லா சிதம்பரம் குரூப் சம்பந்தமான பிரஹ்ம ஞான சபை கிளைச் சங்கங்களின் முதலாவது சந்திப்பானது காட்டுமன்னார் கோவில் ராஜகோபால் லாட்ஜ் ஆதரவின்கீழ் எப்பிரல்மீ 5உ ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சிதம்பரம் ஜெகந்நாதய்யரவர்கள் அக்கிராசனம் வகித்தார். ஷை சபைக்கு 4-லாட்ஜ்களிலிருந்து 14 அங்கத்தினர் வந்திருந்தார்கள். வழக்கமாய் நடைபெறும் அம்சங்களல்லாமல் 3-பிரசங்கங்கள் நடந்தன. காரியாலோசனையில் இவ்வித மீட்டிங் வருஷத்திற்கு குறைந்தது நான்காவது நடக்க வேண்டுமென்றும் ஷை மீட்டிங்கில் குறைந்தது இரண்டு பிரசங்கங்களாவது குரூப்பைச் சேர்ந்த லாட்ஜ் மெம்பர்களால் செய்யப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அடுத்த மீட்டிங் ஜூலை மாதம் முதல் வாரத்தில் ரெட்டியூரில் நடத்துகிறதென்றும் ஏற்பாடாகி இருக்கிறது.

ஆர். சாமிநாத பிள்ளை,

தென்னாற்காடு ஜில்லா உப காரியதரிசி.

அடியிற்கண்ட புஸ்தகங்களை மதுரை பிரஹ்ம ஞான சபையில் ஞானோதயம் ஆபீஸ் மானேஜரிடம் விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 1. | ஹெலினாமபானம்மையார் சரித்திர சுருக்கம் | 0—1—0 |
| 2. | ஹிந்து என்பவன் எவன் | 0—1—0 |
| 3. | மோனம் என்பது ஞானவரம்பு | 0—1—0 |
| 4. | மஹாளயபக்ஷமும் நவராத்திரியும் | 0—1—0 |
| 5. | எண்ணங்களின் ரகஸியம் | 0—1—0 |
| 6. | காயத்ரீ | 0—1—0 |
| 7. | காயத்ரீ ராமாயணம் | 0—1—0 |
| 8. | லோகதருவின் அவதாரங்கள் | 0—1—0 |
| 9. | பகவான் கௌதமபுத்திரன் சரித்திரம் | 0—1—0 |
| 10. | பிர்ஹ்மஞானமும் பிர்ஹ்மஞானசபையும் | 0—1—0 |
| 11. | சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம் | 0—2—0 |
| 12. | மரணபயம் வேண்டாம் | 0—2—0 |
| 13. | லோககுருவாகிய பரமன் வருவானேன் | 0—1—0 |
| 14. | தியானக்கிரம விஷயம் | 0—4—0 |
| 15. | ஒப்பர்த கூலி சட்டம் (மிஸ்டர் அண்ட்ரூஸின் உபந்யாஸம்) | 0—1—0 |
| 16. | டில்லியில் சக்கிரவர்த்தியவர்களின் பட்டாபிஷேகம் | 0—1—0 |
| 17. | தேவாபிமருகுருநாதர் | 0—1—0 |
| 18. | சர்வசமயத்தைப்பற்றியும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனைபற்றியும் சம்பாஷணை | 0—2—0 |
| 19. | கர்மம் | 0—3—0 |
| 20. | விக்கிரஹ ஆராதனை | 0—1—0 |
| 21. | தியாஸபியால் உள்ள பிரயோஜனங்கள் | 0—2—0 |
| 22. | மங்களம்— ஓர் தமிழ்நாடகம் | 0—4—0 |
| 23. | மீனாக்ஷிசுந்தரம்— ஓர் தமிழ்நாடகம் | 0—6—0 |
| 24. | தசாவதாரங்களின் உண்மை | 0—1—0 |
| 25. | திருப்பள்ளியெழுச்சி | 0—1—0 |
| 26. | மதமும் ராஜரீகமும் சுதேச கல்வியும். | 0—1—0 |
| 27. | குழந்தைகளை யழைக்கும் முறை | 0—3—0 |
| 28. | சகோதரத்வம் | 0—1—0 |
| 29. | எல்லாம் வல்ல ஈசன் | 0—1—6 |
| 30. | சந்தியாவந்தனம் | 0—2—0 |

31. லோககுருவின் காரியம். 0—1—6

32. பிர்ஹமஞான சபையின் யந்திரம் 0—0—6

33. நமது குழந்தைகளும் நமது தேசத்து வருங் கால மகிமையும் 0—1—0

34. கடோபநிஷத் 0—8—0

35. ஈசஉபநிஷத் 0—8—0

36. கல்வி கற்பித்தல் ஈசுவரகைங்கரியம். 0—8—0

37. தேவாலயம் தற்கால நிலைமையும் அதன் சீர் திருத்தமும். 0—1—0

38. Gospel of Religion In English 0—2—0

39. பூர்ண சந்திரோதயம் பூராவாலியம் Vol. V 1913-14 ஹு (Rough bind) 1—0—0

40. ஷெ நல்ல பைண்டு Vol. IV. and XI. & XII. 1—4—0

41. ஷெ பூரா பகுதிகள் இல்லாத சிலபகுதிக ளடங்கிய வாலியம் 5, 6, 7, 8, 9, 10, 11, 0—6—0

42. ஞானோதயம் 1923 1924ஹுத்து பகுதிகள் பகுதி ஒன்றுக்கு 0—2—0

## PHOTOS.

43. பி. நாராயணய்யரவர்களின் படம் 0—1—0

44. H. S. ஆல்காட்டவர்களின் படம் 0—1—0

45. தாமோதர்மாவலங்கர் அவர்களின் படம் 0—1—0

46. அன்னிபெஸண்டம் மையாரவர்களின் வாலிப வயதில் எடுத்த படம் 0—1—0

47. ஷெ யாரவர்களின் விருத்தாப்பியத்தில் எடுத்த படம் 0—1—0

48. ஹெலினாம்பாள் அம்மையாரவர்களின் படம் 0—1—0

---

குறிப்பு:— ஒருதடவையில் 12 ரூபாய்க்கு குறையாமல் புஸ்தகங்கள் வாங்குகிறவர்களுக்கு ரூபாய் 1-க்கு 2 அணு வீதமும் 25 ரூபாய்க்கு குறையாமல் வாங்குகிறவர்களுக்கு ரூபாய்க் 4 அணு வீதமும் தள்ளிக்கொடுக்கப்படும். எல்லாபுஸ்தகங்களுக்கும் தபால் செலவு வகையறு தனியாய் கொடுக்கவேண்டும்.